**செய்தி வெளியீடு** **நாள் : 5.2.2024**

**பெருநகர சென்னை காவல் இணை ஆணையர் (மேற்கு) டாக்டர் பொ.விஜய குமார், இ.கா.ப., அவர்கள் தலைமையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாக வியாபாரிகளுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.**

இன்று (06.02.2024) சென்னை, கோயம்பேடு அங்காடி நிர்வாகக் குழு அலுவலகத்தில் பெருநகர சென்னை காவல் இணை ஆணையர் (மேற்கு) டாக்டர் பொ.விஜய குமார், இ.கா.ப., அவர்கள் தலைமையில், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி அவர்கள் முன்னிலையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாக வியாபாரிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் காவல் துறை இணை ஆணையர் (மேற்கு) டாக்டர் பொ.விஜய குமார், இ.கா.ப., அவர்கள் தெரிவித்ததாவது** :

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் கண்காணிப்பினை தீவிரப்படுத்த வியாபாரிகளிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வாகனங்களின் விவரங்களை சங்கத்தின் மூலமாக 15 நாட்களுக்குள் காவல்துறைக்கு அளித்திட வேண்டும். மேலும், கண்காணிப்பு கேமராக்களை அதிகப்படுத்தி அங்காடிக்கு வரும் சரக்கு வாகனங்களை தணிக்கைக்கு உட்படுத்துவதன் மூலம் குட்கா உள்ளிட்ட போதை பொருட்கள் வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருவதை தடை செய்யலாம்.

மேலும் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள புறக்காவல் நிலையத்தில் இரவு 12.00 மணி முதல் காலை 8.00 மணி வரை காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, வியாபார நேரத்தில் ரோந்து பணியினை தீவிர படுத்த காவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வியாபாரிகள் தெரிவிக்கையில், "பண்டிகை காலத்தில் மட்டுமல்லாது மற்ற நாட்களிலும் போக்குவரத்து காவல்துறையினரை வளாகத்தில் பணியில் ஈடுபட வேண்டும், வணிக வளாகத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தது போன்று, மாநகர பேருந்துகள் வளாகத்திற்கு வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மேலும் உணவு தானிய அங்காடியில் இரவு 7.00 மணி முதல் அதிகாலை வரை ரோந்து பணியினை தீவிர படுத்த வேண்டும்" எனவும் வியாபாரிகள் வலியுறுத்தினர்.

இக்கூட்ட இறுதியில், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி அவர்கள் தெரிவிக்கையில், "வியாபாரிகள் அனைவரும் தத்தமது கடைகளுக்கான 2024-2027 தொகுப்பாண்டிற்குரிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 01.03.2024 முதல் சமர்ப்பிக்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் காவல் துணை ஆணையர் (கோயம்பேடு) திருமதி.கோ.உமையாள் அவர்கள், உதவி ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு சரவணன் அவர்கள், உதவி ஆணையர் (போக்குவரத்து) திரு.சுந்தர்ராஜன் அவர்கள் மற்றும் வளாக சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.